# தேவர் திருமகனார் நினைவிடத்தில் முதல்வர் அஞ்சலி!

## முதல் பக்கத் தொடர்ச்சி

• 1989ல் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று புது இடஒதுக்கீடு உரிமையை உருவாக்கி, கல்வி - வேலைவாய்ப்பில் இந்தச் சமூக மக்கள் முன்னேற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவரும் தலைவர் கலைஞர்தான்!

• கழக ஆட்சி முதன்முதலாக உருவானபோது, பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த பிரமுகர்கள், தங்களுடைய மக்களுக்கான கல்வி மேம்பாட்டிற்காக கல்லூரிகளைத் தொடங்கத் திட்டமிட்டார்கள். அவை அனைத்திற்கும் அனுமதி வழங்கியவர் தலைவர் கலைஞர்!

**மேலநீலித நல்லூரில் - ‘பசும்பொன் தேவர் கல்லூரி’ நிறுவியவர் கலைஞர்!**

அதிலும் குறிப்பாக, முக்குலத்தோர் சமூகம், தாங்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் கல்லூரிகளை அமைக்கத் திட்டமிட்டார்கள். முன்னாள் பேரவைத் தலைவர் செல்லப்பாண்டியன் அவர்கள் தலைமையில் ‘தேவர் கல்விச் சங்கம்’ உருவாக்கப்பட்டது. அதன் சார்பில், மேல நீலிதநல்லூரில், அமைந்த பசும்பொன் தேவர் கல்லூரிக்கு அனுமதி வழங்கியதோடு, 44.94 ஏக்கர் நிலத்தையும் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்.

அப்படிப்பட்ட அந்தக் கல்வி நிறுவனம், என்ன நோக்கத்திற்காக தொடங்கப்பட்டதோ, அதைச் சீர்குலைக்கின்ற வகையில் சில தனி நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு பல பிரச்சினைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு அந்த வட்டாரத்து மக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டு வந்தார்கள்.

அப்போது, “ஆட்சி அமைந்ததும் தீர்வு காண்போம்” என்று நான் சொன்னேன். 2021ல் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும், அதை மீட்டிருக்கின்றோம். இப்போது, அரசு மேற்பார்வையில் அந்தக் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

**தெய்வீகத் திருமகனார் அரங்கை கடந்த ஆண்டு நான் திறந்து வைத்தேன்!**

இன்னும் சிறப்பாக நடத்த நிர்வாக ரீதியாக எல்லா உதவிகளையும் நமது திராவிட மாடல் அரசு நிச்சயமாகச் செய்யும் என்று அந்த நல்ல செய்தியையும் நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தேவர் ஜெயந்தி விழாவின் போது, கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் வகையில், வெயில் மற்றும் மழையிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கவும், பசும்பொன் திருமகனார் நினைவிடத்தில், 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள “தெய்வீகத் திருமகனார் உ.முத்துராமலிங்கத் தேவர் அரங்கத்தை” கடந்த ஆண்டு நான்தான் திறந்து வைத்தேன்.

புதிதாக பசும்பொன்னில் ஒரு திருமண மண்டபம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறது. அந்த கோரிக்கையை உடனடியாக ஏற்று 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேவர் திருமகனார் பெயரில் திருமண மண்டபம் அமைக்கப்படும் என்று இந்த நேரத்தில் நான் உறுதி அளிக்கிறேன்!

**முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய பசும்பொன்னார்!**

பசும்பொன் திருமகனாரைப் பற்றி தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிடும்போது, “வீரராகப் பிறந்தார், வீரராக வாழ்ந்தார், வீரராக மறைந்தார், மறைவுக்குப் பிறகும் வீரராகப் போற்றப்படுகிறார்” என்று சொல்வார். அத்தகைய பசும்பொன்னாரைப் போற்றுவோம்! வணங்குவோம்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து முதல்வர் அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:-

**கேள்வி** : கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட தேவர் கல்லூரியில் நிருவாகக் குழு அமைப்பது குறித்து

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் : நடவடிக்கையில் இருக்கிறது. விரைவில் அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவோம்.**

**கேள்வி** : தேவர் திருமகனாருக்கு ‘பாரத ரத்னா’ விருது வழங்குவது குறித்து அ.தி.மு.க. வலியுறுத்தியுள்ளது தொடர்பாக...

**முதலமைச்சர்: அதை நாங்கள் வழிமொழியக் காத்துக்கொண்டிருக்கிறோம்.**

**கேள்வி** : காவேரி – வைகை குண்டாறு இணைப்புத் திட்டம் குறித்து...

**முதலமைச்சர்: முயற்சியில் ஈடுபடுவோம் என்று சொல்லியிருக்கிறோம். இப்போதும் சொல்கிறேன்; முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.**

**கேள்வி** : தொலைக்காட்சி செய்தியாளர்களுக்கு பென்சன் வழங்குவது தொடர்பாக

**முதலமைச்சர் :- இது உங்களுக்கு மட்டும் அல்ல. தமிழ்நாடு முழுவதும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். பரிசீலனையில் இருக்கிறது.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் பேட்டியளித்தார்.




மகாராஷ்டிரா மாநிலம், மும்பையில் நடைபெற்ற உலகளாவிய இந்திய கடல்சார் வார விழா – 2025 (India Maritime Week 2025)வில் தமிழ்நாடு அரசு சார்பில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (29.10.2025) கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

### நீலப் பொருளாதாரத்தை உயர்த்த தமிழ்நாடு உறுதி பூண்டுள்ளது

# கடல்சார் துறையில் முதலீடுகளுக்கு தரமான உள்கட்டமைப்பை உறுதிப்படுத்தி வருகிறோம்!

## மும்பையில் – உலகளாவிய இந்திய கடல்சார் வார விழாவில் – அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

மும்பை, அக். 31-

மகாராஷ்டிரா மாநிலம், மும்பையில் நடைபெற்ற “உலகளாவிய இந்திய கடல்சார் வார விழா - 2025” (India Maritime Week - 2025) நிகழ்வில், தமிழ்நாடு அரசு சார்பில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டுசிறப்புரையாற்றினார்.

மகாராஷ்டிரா மாநிலம், மும்பையில் 27.10.2025 முதல் 31.10.2025 வரை நடைபெற்று வரும் உலகளாவிய இந்திய கடல்சார் வார விழா - 2025 (India Maritime Week 2025) நிகழ்வில், தமிழ்நாடு அரசு சார்பில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்எ.வ.வேலு, நேற்று முன்தினம் (29.10.2025) கலந்து கொண்டு, சிறப்புரையாற்றினார்கள். தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களும் கலந்து கொண்டார்.

தமிழ்நாட்டின் சார்பாக, சென்னை & காமராஜர் துறைமுகத்தின் தலைவர் சுனில் பாலிவால், சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே.மணிவாசன், தமிழ்நாடு கடல்சார் வாரியத் துணைத் தலைமைச் செயல் அதிகாரி டி.என்.வெங்கடேஷ், தமிழ்நாடு கைடன்ஸ் மேலாண்மை இயக்குநர்/ தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் தாரேஸ் அஹமது, சென்னை துறைமுக துணைத் தலைவர் எஸ்.விஸ்வநாதன், JSW இணை மேலாண்மை இயக்குநர் / தலைமை நிர்வாக அதிகாரி ரிங்கேஷ் ராய், மஹதி குழுமத்தின் மேலாண்மை இயக்குநர் ரவிஷங்கர், Waterways Wat Leisure Tourism, பொது மேலாளர்/ தலைமை நிர்வாக அதிகாரி யூர்கென் பைலம், ஹூண்டாய் மோட்டார்ஸ் பொது மேலாளர் கார்த்திக் மற்றும் தொழில்துறை பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் தனது உரையில் தெரிவித்ததாவது:

இந்திய கடல்சார் வாரம் - 2025 விழாவில் தலைமையேற்று நடத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டமைக்கு, மிகுந்த நன்றியையும், பெருமையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்த விழா, இந்தியாவின் கடல்சார் துறையின் வலிமையையும், வளர்ச்சி பாதையையும் உலகிற்கு வலியுறுத்தும் ஒரு முக்கிய மேடையாகும். 100க்கும் மேற்பட்ட கடல்சார் நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் இந்த விழாவில், தமிழ்நாடு தனது தனித்துவமான கடல்சார் உள்கட்டமைப்பையும், வர்த்தக திறனையும் உலகிற்கு காட்டும் ஒரு அரிய வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கிறது என்றும், 1,069 கிலோ மீட்டர் நீளமான கடற்கரை எல்லையுடன் இந்தியாவின் மிக நீண்ட கடற்கரையை கொண்டுள்ள 2ஆவது மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டில், கடல்சார் வர்த்தகத்திற்கு இன்றியமையாதவையாக விளங்கும்; 3 முக்கிய பெருந்துறைமுகங்களும், (சென்னை, தூத்துக்குடி மற்றும் எண்ணூர்), 17 சிறுதுறைமுகங்களும், தொழிற் பூங்காக்களும் உள்ளன என்றும், அண்டை நாடான இலங்கைக்கு வெகு அருகாமையில் இருப்பதால், சரக்கு ஏற்றுமதி, இறக்குமதி, மீன்பிடித் துறைமுகங்கள், கடல் உணவு பதப்படுத்துதல், கப்பல் கட்டுதல், பழுதுபார்த்தல், மறுசுழற்சி செய்தல் மற்றும் கடல்சார்ந்த சுற்றுலாத் துறை மேம்பாடு, பன்னாட்டு பயணியர் கப்பல் போக்குவரத்து போன்றவைகளில் தமிழ்நாட்டை ஒரு முக்கிய மையமாக மாற்றியுள்ளன என்றும் தெரிவித்தார்.

பண்டைய சோழப்பேரரசு காலத்திலிருந்தே பூம்புகார் மற்றும் மாமல்லபுரம் துறை முகங்கள் மூலமாக, உலக நாடுகளுடன் கடல்வணிகம் செய்த வரலாற்றினை தமிழ்நாடு பெற்றுள்ளது. தற்போது, இந்தியாவின் ‘சாகர்மாலா’ போன்ற முன்னோடியான திட்டங்கள் மூலம் துறைமுகங்களின் மேம்பாடு மற்றும் தொழில்துறையின் வளர்ச்சியில் இந்தியா முன்னணி நாடாக மாறி வருகிறது என்பதை எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு உகந்த சூழ்நிலையினை பயன்படுத்தி, உள்நாட்டு கப்பல் கட்டுதலை ஊக்குவிக்க, தூத்துக்குடி மற்றும் கடலூர் துறைமுகங்களை பயன்படுத்தும் வகையில் முக்கிய முயற்சிகளை மேற்கொண்டு, புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையெழுத்திட்டு செயல்பட தொடங்கி விட்டது என்பதை தெரிவித்தார்.

சமீபத்தில் சென்னையில் 18.9.2025 அன்று நடைபெற்ற நீல பொருளாதார மாநாடு - 2025இல், தமிழ்நாடு தனது கடல்சார் வாய்ப்புகளை முழுமையாக காட்சிப்படுத்தி, முதலீட்டாளர்களை ஈர்க்கும் விதத்தில், பல புதிய ஆலோசனைகளை முன்வைத்தது. இந்த முயற்சியை, இந்திய கடல்சார் வாரியம் - 2025 விழாவின், ஒரு தொடர் பகுதியாகவே மாறியுள்ளது என்றும், “ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம்” என்ற இலக்குடன் பயணித்து வரும் தமிழ்நாடு அரசு, தனது கடல் சார் வர்த்தகம் மற்றும் தொழில் துறையை மேம்படுத்துவதை முக்கிய இலக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறது என்பதை எடுத்துரைத்த அமைச்சர் , கடல் சார்ந்த வளங்களை திறன் வாய்ந்த வகையில் பயன்படுத்தி, நிலையான வேலை வாய்ப்பு, வாழ்வாதார மேம்பாடு போன்றவற்றின் மூலம் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், பெரும்பங்கு வகிக்கும் நீலப்பொருளாதாரத்தை உயர்த்த தமிழ்நாடு உறுதி பூண்டுள்ளது என்றும், தமிழ் நாட்டில் கடல்சார் துறையில் முதலீடுகளுக்கு தரமான உள்கட்டமைப்பு, திறமையான மனிதவளம், நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய தொழில் சூழல் இவற்றை நாம் உறுதிப்படுத்தி வருகிறோம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், தனியார் முதலீட்டுடன் கடலூர் துறைமுகத்தை 40 ஆண்டுகளுக்குப் பிறகு இயக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இராமேஸ்வரம் தீவுப் பகுதியை கடல் மார்க்கமாக சுற்றிவர படகுப் போக்குவரத்து துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இராமேஸ்வரம் (இந்தியா) தலைமன்னார் (இலங்கை) இடையே குறைந்த தூர பன்னாட்டு கப்பல் போக்குவரத்து துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வண்ணம் கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறையையும் அய்யன் திருவள்ளுவர் பாறையையும் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை கையாள சுமார் 8 கிலோ மீட்டர் நீளம் கொண்ட அணுகு தோணித் துறை உடன்குடியில் அமைக்கப்பட்டு, விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது என்றும், கடலூரில் கடல்சார் அருங்காட்சியகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தரங்கம்பாடி - நாகப்பட்டினம் வேளாங்கண்ணி இடையே பயணிகள் படகு போக்குவரத்து துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பன்னாட்டு முதலீடுகளை ஈர்க்க, சென்னையில் தொடர்ந்து, பன்னாட்டு முதலீட்டாளர்கள் மாநாட்டினை நடத்தியுள்ளார்கள். மேலும், அவரே பல்வேறு உலக நாடுகளுக்கும் நேரடியாக சென்று, முதலீட்டாளர் களை சந்தித்து, தமிழ் நாட்டில் தொழில் துவங்க அழைப்பு விடுத்தும் வருகிறார். இந்தியாவிலேயே தொழில் துவங்க உகந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

பல்வேறு உலக நாடுகளில் இருந்து வந்துள்ள முதலீட்டாளர்களை, தமிழ் நாட்டின் வளர்ந்து வரும் கடல்சார் சூழ்நிலையை ஆராய்ந்து, இணைந்து பயணிக்க அமைச்சர் அழைப்பு விடுத்தார்கள். இந்தியாவை உலகின் கடல்சார் மையமாக மாற்றும் மாபெரும் பயணத்தில், தமிழ்நாடு உறுதுணையாக இருந்து, முன்மாதிரியாக செயல்படும் உறுதியுடன் இருக்கிறது என்று, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள்மற்றும்சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்கள்.

இந்தியாவின் கடல்சார் பொருளாதாரத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கும் வகையில், தமிழ்நாட்டை மையப்படுத்தி இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்த ஒன்றிய அரசின் அதிகாரிகளுக்கும், ஒன்றிய அமைச்சர் சர்பானந்தா சோனாவால் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து உரையை நிறைவு செய்தார்.

### மதுரையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் – மாமன்னர்கள் மருது பாண்டியர்கள்

# திருவுருவச் சிலைகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர்கள் – கழகத்தினர் பங்கேற்பு!

மதுரை, அக். 31 -

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் குருபூஜை விழாவில் பங்கேற்க மதுரை வந்தார்.

அதுசமயம் மதுரையில் இருந்து பசும்பொன் கிராமத்தில் நடைபெறும் தேவர் திருமகனாரின் குருபூஜையில் பங்கேற்க செல்வதற்கு முன்பாக மதுரை கோரிப்பாளையத்தில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்ட பிரமாண்டமான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் முழு உருவ வெங்கல சிலைக்கு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் திருவுருவச் சிலைக்கு கீழ் அமைக்கப்பட்டிருந்த தேவர் திருமகனார் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்டு மதுரை தெப்பக்குளத்தில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் திறக்கப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர்கள் மாமன்னர்கள் மருதுபாண்டிய சகோதரர்களின் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு பசும்பொன் சென்றார்.

சிறப்புமிக்க இந்நிகழ்வுகளில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர்கள் கே.என். நேரு, ஐ.பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, ஆர்.எஸ்.ராஜ. கண்ணப்பன், பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், கீதா ஜீவன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்செல்வன் எம்.பி., ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் காதர் பாஷா என்ற முத்து ராமலிங்கம் எம் எல் ஏ.,

முன்னாள் அமைச்சர் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், கழகத் தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, கழக தீர்மானக் குழு செயலாளர் அக்ரி கணேசன், மதுரை வடக்கு மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ., மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் ஜி.பி.ராஜா, இன்பாரகு, முன்னாள் எம்.எல்.ஏ. முத்துராமலிங்கம், வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.இளங்கோ, உசிலம்பட்டி நகரச் செயலாளர் எஸ்.ஓ.ஆர்.தங்கப்பாண்டியன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்

### கோயம்பேடு மேம்பால

# சாலைப் பழுதுகள் உடனடியாக சீர் செய்யப்பட்டது!

## ஆங்கில நாளிதழ் செய்திக்கு நெடுஞ்சாலைத்துறை அறிக்கை!

**சென்னை, அக்.31-**

**சென்னை கோயம்பேடு மேம்பாலத்தின் சாலை பகுதி பழுதடைந்துள்ளதாக ஆங்கில நாளிதழ் மற்றும் தொலைக்காட்சியில் செய்தி வெளியிடப்பட்டது. மழையினால் ஏற்பட்ட பாதிப்பை உடனடியாக சீரமைத்தல் தொடர்பாக நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் தலைமைப் பொறியாளர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு வருமாறு:**

சென்னை, கோயம்பேடு மேம்பாலம் உள்வட்ட சாலையில் கி.மீ. 7/4 - 7/10 (SH2)இல் அமைந்துள்ளது. இந்த உயர்மட்ட பாலம் போக்குவரத்திற்கு பாதுகாப்பாக உள்ளது. தினந்தோறும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் இந்த சாலையை பயன்டுத்துகின்றன. இந்த சாலையின் மேம்பாலத்தில் Wearing Coat Concreteஇல் அமைக்கப்பட்டுள்ளது.

29.10.2025 நாளிட்ட ஆங்கில நாளிதழ் மற்றும் தொலைக்காட்சி ஒன்றில் சென்னை கோயம்பேடு மேம்பாலம் பழுதடைந்துள்ளதாகவும், போக்குவரத்திற்கு பாதுகாப்பாக இல்லை என்றும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. பாலத்தின் மேற்பகுதியில் உள்ள Concrete Wearing Coat சில இடங்களில் தேய்மானத்தின் காரணமாக சிறிய பழுதுகள் ஏற்பட்டுள்ளது. அந்த பழுதுகளை தலைமைப் பொறியாளர் (நெ), க(ம)ப அவர்கள் ஆய்வு செய்து பழுதுகளை உடனடியாக சீர் செய்ய உத்தரவிட்டதின் பேரில் பழுதுகள் உடனடியாக சரி செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் தமது செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

### அமெரிக்க அதிபர்

# டிரம்புக்கு பதிலளிக்க மோடிக்கு துணிவு இல்லை!

## காங்கிரஸ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, அக். 31 -

இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தியதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தொடர்ந்து கூறி வரும் நிலையில், அதற்கு பதிலளிக்க பிரதமர் மோடிக்கு துணிவு இல்லை என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி விமர்சனம் செய்துள்ளார்.

இதுதொடர்பாக, ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதள பக்கத்தில், அமெரிக்க அதிபர் டிரம்ப், நாடு நாடாகச் சென்று,

பிரதமர் மோடியை அவமதித்து வருவதாகவும், தற்போது, தென்கொரியா நாட்டில் அவமதித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலை நிறுத்துவதற்காக, வர்த்தக ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி பிரதமர் மோடியை பயமுறுத்தியதாக டிரம்ப் மீண்டும் மீண்டும் கூறுவதையும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

ஏழு விமானங்களை சுட்டு வீழ்த்தியதாகவும் டிரம்ப் கூறியதாக ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

டிரம்பின் கருத்துக்கு பதிலளிக்க பிரதமர் மோடிக்கு துணிவு இல்லையா என வினவியுள்ள ராகுல் காந்தி,

இந்த விவகாரத்தில், பயப்பட வேண்டாம் மோடி அவர்களே என்றும், தைரியமாக பதிலளிக்க வேண்டும் என்றும் ராகுல் காந்தி கூறியுள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**(தெற்கு வட்டாரம்) இயந்திரப் பொறியியல் துறை**

வ.அ.(தெ).இ.பொ.து.ந.க.எண்.எஸ்1/303/2025

**மின்னணு ஒப்பம்**

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (தெற்கு) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

**பணியின் விவரம் : புதிதாக வழங்கப்பட்ட 15 எண்ணிக்கையிலான அமலாக்க வாகனங்களை இயக்குவதற்கு 30 எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்களை (LMV Drivers) 06 மாத காலத்திற்கு (180 நாட்களுக்கு) மின்னணு மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்துவதற்கு ஒப்பம் கோரப்படுகிறது (ஒப்ப விதிகளின்படி)**

**பணியின் மதிப்பு : ரூ.66,53,124/-     முன் வைப்பு தொகை ரூ.66,600/-**

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **13.11.2025 மாலை 03.00 மணி**

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **14.11.2025 மாலை 03.15 மணி**

மேலும் விவரங்களுக்கு : **http://tntenders.gov.in**

செ.ம.தொ.இ / 5915 / ஒப்பந்தப்புள்ளி / 2025

**மேற்பார்வை பொறியாளர் (தெற்கு)**




சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்பதற்காக மாவட்ட கழகச் செயலாளர், கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் கழக நிர்வாகிகள் திரண்டிருந்தனர்.